**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.G. தங்கபாண்டி பி.இ., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ), | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:04.05.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – அவரசக்கூட்டம் 30.04.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 30.04.2020 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்(பொ),**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**<u>பொருள் எண்– 1</u>**

இந்நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) அவர்களின் 09.04.2020 முதல் 30.04.2020ம் தேதிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 14/2020/சி1)**

**தீர்மான எண். 72**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 2</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25715/2019/UPA1, நாள்.02.04.2020ன்படி கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க 144 தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள 121 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.1000/– வீதம் வழங்க ரூ.1,21,000/–ம் நிவாரணத் தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2268/2020/எப்1)**

**தீர்மான எண். 73**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 3</u>**

இந்நகராட்சி மூலம் கொரோனா தொற்று நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சிக்குட்பட்ட தெருக்கள், பொது இடங்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள (615+248=863) நபர்களின் வீடுகளில் தினந்தோறும் கிருமி நாசினி தெளித்தல் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணிகளுக்கு பணியாளர்கள் உபயோகப்படுத்தும் முழுகவசம் துப்புரவு பணியாளர்களின் பாதுகாப்பை கருதி வழங்கிட வேண்டும் என சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ந.க.எண்.5437/20/ஜே1 நாள்.11.04.2020ல் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

இதன்படி இந்நகராட்சிக்கு தற்போது கூடுதலாக தேவைப்படும் 50 எண்ணம் முழுபாதுகாப்பு கவசத்தை (Personal Protective equipment) துப்புரவு பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.04.2020ம் தேதிய வாட்ஸ் ஆப் செய்தி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வாட்ஸ் ஆப் செய்தி மற்றும் அறிவுரையின்படி Dream Infra, 19, Erier street. Thoothukudi நிறுவனத்தின் மூலம் வாங்கி வழங்கிட பிரிவு 15ன் கீழ் விநியோக உத்திரவு வழங்கியதற்கு அனுமதியும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.60,000/–(ரூபாய் அறுபதாயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 74**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 4</u>**

இந்நகராட்சி மூலம் கொரோனா தொற்று நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சிக்குட்பட்ட தெருக்கள், பொது இடங்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள (615+248=863) நபர்களின் வீடுகளில் தினந்தோறும் கிருமி நாசினி தெளித்தல் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் சுண்ணாம்பு பவுடர் இருப்பு குறைவாக உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி தேவைப்படும் 10டன் சுண்ணாம்பு பவுடர், ஆணையாளர் அவர்களின் 15.04.2020ம் தேதிய குறிப்பின்படி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | அளவு | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி | 1 கிலோ | ரூ. 9.50 |
| 2. | வாசன் ஏஜென்ஸி, கல்லிடைக்குறிச்சி | 1 கிலோ | ரூ.9.90 |
| 3 | ஸ்ரீ நாச்சியார் டிரேடர்ஸ், கடையநல்லூர் | 1 கிலோ | ரூ.10.20 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள நாகாஸ் கெமிக்கல்ஸ், சொக்கம்பட்டி நிறுவனத்தின் மூலம் வாங்கி வழங்கிட அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 75**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 5</u>**

இந்நகராட்சி மூலம் கொரோனா தொற்று நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சிக்குட்பட்ட தெருக்கள், பொது இடங்களில் தீயணைப்பு நிலைய வாகனம், நகராட்சி குடிநீர் லாரி, கைதெளிப்பான் ஆகியவைகள் மூலம் தினந்தோறும் கிருமி நாசினி தெளித்தல் பணி நடைபெற்று வருகிறது.

தீயணைப்பு மீட்பு பணிகள் நிலைய அலுவலர் கடிதம் நாள்.13.04.2020ன்படி, தீயணைப்பு வாகனத்திற்கு டீசல் எரிபொருள் மாத ஒதுக்கீட்டை விட அதிகமானதால் தற்போது நகராட்சி மூலம் வழகிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கிருமி நாசினி தெளிக்கும் பணியானது மிகவும் அத்தியாவசியமான பணியாகும். எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீயணைப்பு நிலைய வாகனத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் நேரங்களில் நகராட்சி மூலம் எரிபொருள் நிரப்பி கொள்ளவும் இதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 76**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 6</u>**

கடையநல்லூர் நகராட்சி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76B 1197 டிப்பர் வாகனத்தின் மின்கலன் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தினை இயக்க முடியாமல் சிரமாக உள்ளது. ஆகவே பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மேற்காணும் வாகனத்திற்கு புதிதாக மின்கலம் வாங்கி வழங்கவும் உத்தேச செலவீனத்தொகை ரூ.8000/– உத்தேச மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் 20.04.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணிமனைதாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | மூஸா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், 194,செங்கோட்டை ரோடு, தென்காசி. | ரூ.8000/– |

| | | |
|---|---|---|
| 2. | நியூராயல் ஆட்டோமொபைல்ஸ்,<br>56B, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி. | ரூ.8400/– |
| 3. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1A, பழைய பேருந்து நிலையம் ரோடு,<br>தென்காசி. | ரூ.8700/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள மூஸா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், 194 செங்கோட்டை ரோடு, தென்காசி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டும் TN76B 1197 டிப்பர் வாகனத்திற்கு புதிய மின்கலம் வாங்கி பொருத்தப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 91/2020/எச்1)**

**தீர்மான எண். 77**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 7</u>**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.178 நாள்.02.05.2017 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1399/2013/அ3 நாள்.14.07.2017ன்படி இந்நகராட்சி வாரச்சந்தையிலுள்ள கடை எண் 34க்கு திரு.பி.மவுதுங்கனி 17பி, பள்ளிவாசல் தெரு, பாம்புக் கோவில் சந்தை என்பவருக்கு 01.04.2017 முதல் 31.03.2020 வரை உரிமம் வழங்கப்பட்டு அன்னார் இக்கடையினை நடத்தி வந்தார். மேலும் அன்னார் 01.04.2019 முதல் 31.03.2020 வரைக்கான வாடகை தொகை ரூ.9960+ சேவை வரி ரூ.1193 ஆகமொத்தம் ரூ.11753/–ஐ இவ்வலுவலக அறிவிப்புக்கடிதம் நாட்கள் 03.01.2020 மற்றும் 05.02.2020 வழியாக நிலுவைத் தொகையினை செலுத்தக் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் அன்னார் எவ்வித முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் மேற்படியார் 24.03.2020ம் தேதிய மனுவில் தனக்கு உடல் நிலை சரியில்லை எனவும் இக்கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும் தெரிவித்துள்ளார். ஆணையரவர்களின் 30.03.2020ம் தேதிய உத்தரவின்படி அன்னார் 25.02.2014ல் செலுத்தியுள்ள ஏல முன்வைப்புத்தொகை 2018–19 காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு பக்கம் 149 வ.எண்.145ன்படி உள்ள ரூ.20000/–ல் வாடகை தொகை ரூ.11753/– ஈடுசெய்யப்பட்டது. மேலும் அன்னார் மேற்கண்டகடைக்கு 09.05.2017ல் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2490/– செலுத்தியுள்ளார். எனவே ரூ.20000/–ல் ஈடுசெய்யப்பட்ட தொகை போக ரூ.8247/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2490 ஆக மொத்தம் ரூ.10737/–ஐ தணிக்கை முடிந்த பின்பு அன்னாருக்கு திரும்ப வழங்கவும், இக்கடையினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1399/2013/அ3)**

**தீர்மான எண். 78**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்–8</u>**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.173 நாள்.24.04.2017 மற்றும் இவ்வலுவக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.14.07.2017ன்படி இந்நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள கடை எண்.3, 4, 5, 6, 7 மற்றும் 8 க்கு 01.04.2017 முதல் 31.03.2020 வரை புதியதாக வாடகை நிர்ணயம் செய்து உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

| க. எண் | பெயர் / முகவரி | தற்போது உள்ள வாடகை | புதுப்பித்தலுக்கு பின் 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|
| 3. | திரு.ச.மாரியப்பன்,<br>88ஏ, பஜனைமடம் தென்வடல் தெரு,<br>மேலக்கடையநல்லூர். | 4800 | 5520 |

| | | | |
|---|---|---|---|
| 4. | திரு.எம்.சண்முகையா,<br>39/3, நடுத்தெரு,<br>காசிதர்மம் | 4800 | 5520 |
| 5. | திரு.முகையதீன் பிச்சை<br>8/5ஏ, குளத்தூரான் கோவில் தெரு,<br>தென்காசி. | 4800 | 5520 |
| 6. | திரு.D.சேக்மைதீன்,<br>38, SKP தெரு,<br>தென்காசி. | 4800 | 5520 |
| 7. | திரு.K.M.அப்துல் ரஹீம்<br>S/o, முகையதீன் பிச்சை,<br>3 தெற்கு புதுமனைத் தெரு,<br>கடையநல்லூர். | 4800 | 5520 |
| 8. | திரு.D.சேக்மைதீன்,<br>S/o, திவான் மைதீன்,<br>38, SKP தெரு,<br>தென்காசி. | 4800 | 5520 |

மேலும் மேற்கண்ட கடைகளின் உரிமம் 31.03.2020 உடன் முடிவடைவதால் 01.04.2020 முதல் 31.03.2023 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமத்தினை புதுப்பித்தும் ஏற்கனவே உள்ள வாடகை 15% உயர்வு செய்தும் உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.5640/2016/அ3)**

**தீர்மான எண். 79**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 9</u>**

தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.உ4/4368/2020 நாள்.06.04.2020 மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து கோவிட்–19 கொரோனோ வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகளுக்கு ரூ.2,00,000/– நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் மாணவியர் விடுதி காப்பாளினி அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளதன்படி, இந்நகராட்சி இளநிலை பொறியாளரால் மேற்காணும் விடுதியினை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் அடிப்படை வசதி பணிகளான குடிநீர், கழிப்பறை, மின்வசதி, மகளிர் விடுதி வராண்டாவில் பெண்கள் அமர்ந்து சாப்பிடும் வசதிகள், பொருட்கள் பாதுகாக்கும் அறைகள் (Shelves) அமைத்தல் மற்றும் துணி துவைக்கும் சலவைக்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.200000/–க்கு மதிப்பீடுகள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1557/2020/இ1)**

**தீர்மான எண். 80**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 10</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு டிப்பர் லாரி–1, மினி டிப்பர் லாரி–2, மினி அட்டோ–2, டிராக்டர்–1 மற்றும் டம்பர் பின் லாரி–1 எண்ணமும் பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. மேலும் பொறியியல் பிரிவில் JCB இயந்திரம் மற்றும் குடிநீர் பிரிவில் டேங்கர் லாரி–1 எண்ணமும் பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்த 8 எண்ணம் Light Commercial வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் மொத்தம் 15 வாகனங்கள் மற்றும் JCB இயந்திரம் சேர்த்து 16 எண்ணம் வாகனங்கள் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தி வரும் நிலையில் நிரந்தர ஓட்டுநர்கள்.3 நபர்கள், துப்புரவு பணியாளர் பணியிடத்தில் தகுதிப்பெற்ற ஓட்டுநர் 4 நபர்கள்

மற்றும் Out sourcing தற்காலிக துப்புரவு பணியாளர்கள் பணியிடத்தில் உள்ள ஓட்டுநர் –2 நபர்கள் ஆகமொத்தம் 9 நபர்கள் மட்டுமே உள்ளனர். ஆகவே பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் (Out sourcing) 7 நபர்கள் ஓட்டுநர்கள் மே–2020 முதல் ஜனவரி–2020 வரை வழங்கி மேற்கொள்ளும் பணிக்கு உத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூ.9,95,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனி அலுவலரால் 15.04.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் குறுகியகால ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1555/2020/இ1)**

**தீர்மான எண். 81**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 11**

இந்நகராட்சிப் பகுதியில் ஒப்பந்த பணிகள் எடுத்து செய்ய புதிதாக ஒப்பந்த பதிவினை பதிவு செய்ய வரும் விண்ணப்பங்களை இஞ்சினியரிங் மேனுவல்படி புதிதாக பதிவு செய்யப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் அரசாணை எண்.181 பொதுப்பணித்துறை நாள்.16.05.2003 மற்றும் அரசாணை எண்.251 நெடுஞ்சாலைத்துறை நாள்.12.10.2007ன் படி தரத்தின் அடிப்படையில் பதிவு கட்டணம் வசூலிக்கப்படவில்லை என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் பத்தி எண்.51/2015–2016, 36/2016–17 மற்றும் 17/2017–2018/ வருவாய் நிதி–ன்படி தொடர்ந்து தணிக்கைத்தடை எழுப்பப்பட்டு வரப்படுகின்றது. ஆகவே மேற்காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளபடி 2020–2021ம் ஆண்டு முதல் புதிதாக ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்ய தரத்தின் அடிப்படையில் தொகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | புதிதாக பதிவு விண்ணப்பக் கட்டணம் ரூ | GST 12% ரூ. | புதிய பதிவு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தரம் V | 1000/– | 120/ | 10,000/– |
| 2. | தரம் IV மற்றும் III | 1000/ | 120/ | 20,000/– |
| 3. | தரம் II & I | 1000/ | 120/ | 40,000/– |

**(ந.க.எண்.1582/2020/இ1)**

**தீர்மான எண். 82**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 12**

இந்நகராட்சிப் பகுதியில் ஒப்பந்த பணிகள் எடுத்து செய்து வரும் ஒப்பந்தக்காரர்கள் பதிவினை ஆண்டுதோறும் இஞ்சினியரிங் மேனுவல் படி புதுபிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் எழுப்பப்பட்ட தணிக்கை தடை பத்தி எண்.51/2015–16/வருவாய் நிதி, 37/2016–17/வருவாய் நிதி மற்றும் 17/2017–2018/வருவாய் நிதி–ன்படி தொடர்ந்து எழுப்பப்பட்டு வரப்படுகின்றது. மேலும் அரசாணை எண்.181 பொதுபணித்துறை நாள்.16.05.2003 மற்றும் அரசாணை எண்.251 நெடுஞ்சாலைத் துறை நாள்.12.10.2007ன்படி ஒப்பந்தகாரர்களின் தரத்தின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படவில்லை என தணிக்கை தடையில் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுவரப்படுகின்றது. ஆகவே மேற்காணும் அரசாணைகளின் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தக்காரர் பதிவு புதுப்பித்தல் கட்டணத்தை 2020–2021 முதல் தரத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | புதுபித்தல் விண்ணப்பக் கட்டணம் ரூ. | GST 12% ரூ. | புதுப்பித்தல் பதிவு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தரம் V | 200/– | 25/– | 1000/– |
| 2. | தரம் IV மற்றும் III | 300/ | 36/– | 2000/– |
| 3. | தரம் II & I | 500/ | 60/– | 4000/– |

(ந.க.எண்.1581/2020/இ1

**தீர்மான எண். 83**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 13</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018–19ன் கீழ் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.எம். முகம்மது அபூபக்கர் அவர்கள் இந்நகராட்சிக்கு பரிந்துரை செய்த **கடையநல்லூர் நகராட்சி கலந்தர் மஸ்தான் பிரதான தெருவில் ( வார்டு 19) குடிநீர் பகிர்மான பைப்லைன் அமைத்தல் பணிக்கு** மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/4193/2018 நாள்.26.03.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பணியின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 3271/2019 /இ1)

**தீர்மான எண். 84**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 14</u>**

கடையநல்லூர் நகராட்சி – **பேரிடர் மேலாண்மை SDRF–கோவிட்–19** கடையநல்லூர் நகராட்சி– அரசு பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் மாணவியர் விடுதியில் அடிப்படை பணிகள் (குடிநீர், கழிப்பறை, மின்வசதி, மாணவியர் அமர்ந்து உணவு அருந்தும் வசதி, பொருட்கள் பாதுகாக்கும் அறைகள் மற்றும் சலவைக்கல்) ரூ.200000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு **தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். உ4/4368/2019 நாள் 06.04.2020 ன் படி நிர்வாக அனுமதி** வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.41% குறைவு | ரூ.2000/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000156 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.ஆயிசா ஒப்பந்தக்காரர், பேட்டை,திருநெல்வேலி. | 16.94% அதிகம் | ரூ.2000/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000157 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.41% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. APMA காஜா,ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கோவிட்–19 பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 16.04.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 1557/2020/இ1)

**தீர்மான எண். 85**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 15</u>**

கடையநல்லூர் நகராட்சி – **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–2020ன் கீழ்** ரூ.**800000/–** மதிப்பீட்டில் ஆஞ்சநேயர் கோவில் அருகில் நகராட்சி பூங்காவில் அங்காடிமையம் அமைத்தல் பணிக்கு தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/5044/2019 நாள் 16.03.2019ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.48 நாள்.07.04.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணியினை செய்ய 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு.S. முருகையா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூார். | 0.02%<br>குறைவு | ரூ.2000/– செல்லாண்<br>எண்.141/001/2/20–21/0000177<br>நாள்.17.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |
| திரு. C.வேலுத்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூார். | 2.32%<br>அதிகம் | ரூ.2000/– செல்லாண்<br>எண்.141/001/2/20–21/0000178<br>நாள்.17.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.02%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.S.முருகையா, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3271/2019/இ1)**

**தீர்மான எண். 86**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 16</u>**

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–2020ன் கீழ்** ரூ.**290000/–** மதிப்பீட்டில் கடையநல்லூர் நகராட்சி கலந்தர் மஸ்தான் பிரதான தெருவில் ( வார்டு 19) குடிநீர் பகிர்மான பைப்லைன் அமைத்தல் பணிக்கு தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/4193/2018 நாள் 26.03.2019ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் மேற்காணும் பணியினை செய்ய 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P. சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூார். | 0.17%<br>குறைவு | ரூ.2900/– செல்லாண்<br>எண்.141/001/2/20–21/0000182<br>நாள்.17.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |
| திரு. U.சேக்அப்துல்காதர்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூார். | 2.46%<br>அதிகம் | ரூ.2900/– செல்லாண்<br>எண்.141/001/2/20–21/0000181<br>நாள்.17.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.17%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P. சாகுல்கமீது, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3271/2019/இ1)**

**தீர்மான எண். 87**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 17</u>**

கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.9 ஜவஹர் தெருவில் உள்ள குடிநீர் வால்வு தொட்டி பழுதடைந்துள்ளதை சரிசெய்யவும் மற்றும் வார்டு எண்.15 பஜார் தெரு அல்லிமூப்பன் தெரு சந்திப்பில் உள்ள வாறுகால் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை ரூ.72000/– மதிப்பீட்டில் சரிசெய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.36 நாள்.12.03.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P. சாகுல்கமீது, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.14% குறைவு | ரூ.750/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000180 நாள்.17.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. U.சேக்அப்துல்காதர், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 3.83% அதிகம் | ரூ.750/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000179 நாள்.17.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.14%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P. சாகுல்கமீது, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1198/2020/இ1)**

**தீர்மான எண். 88**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 18</u>**

கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.14 பஜார் தெரு ஹிதாயத்துல் இஸ்லாம் மேநிலைப்பள்ளி வளாகத்தினை ஒட்டி சிதிலமடைந்துள்ள வாறுகால் மற்றும் பாலத்தினை சரிசெய்யவும் மற்றும் வார்டு எண்.11 மாவடிக்கால் பிள்ளையார் கோவில் குறுக்கு தெருவில் சிதிலமடைந்துள்ள வாறுகால் மற்றும் பாலத்தினை ரூ.135000/– மதிப்பீட்டில் சரிசெய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.55 நாள்.07.04.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.0 4% குறைவு | ரூ.1400/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000154 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.ஆயிசா ஒப்பந்தக்காரர், பேட்டை,திருநெல்வேலி. | 5.22% அதிகம் | ரூ.1400/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000153 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1451/2020/இ1)**

**தீர்மான எண். 89**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 19</u>**

கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.9 ஜவஹர் தெருவில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் வால்வு தொட்டி மற்றும் வார்டு எண்.31 மேற்கு மலம்பாட்டைத்தெரு ஆடறுப்புமனை எதிரே அமைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய் வால்வு தொட்டி பழுதடைந்துள்ளதை அகற்றி விட்டு புதிதாக வால்வு தொட்டிகள் ரூ.140000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.56 நாள்.07.04.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.01% குறைவு | ரூ.1400/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000160 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.ஆயிசா ஒப்பந்தக்காரர், பேட்டை,திருநெல்வேலி. | 1.08% அதிகம் | ரூ.1400/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000161 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1450/2020/இ1)**

**தீர்மான எண். 90**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 20</u>**

கடையநல்லூர் நகராட்சி – குடிநீர் விநியோக பணிகளுக்கு பணியாளர்கள் ஒப்பந்தஅடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் 990000/– மதிப்பீட்டில் பணியிலமர்த்தும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.71 நாள்.07.04.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 17.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | மதிப்பீட்டு சதவீதம் | ரூ.9900/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000158 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.ஆயிசா ஒப்பந்தக்காரர், பேட்டை,திருநெல்வேலி. | 8.05% அதிகம் | ரூ.9900/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000159 நாள்.16.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டு சதவீதத்தில் திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்காரரிடம் விலைக்குறைப்பு **(Negotation)** கடிதம் 20.04.2020 அன்று கோரப்பட்டதில் மேற்காணும் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டு சதவீதத்திலிருந்து குறைத்து 0.26% சதவீதத்தில் பணிகள் மேற்க்கொள்ள சம்மதக்கடிதம் வழங்கியுள்ளார். எனவே திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1541/2020/இ1)**

**தீர்மான எண். 91**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 21**

இந்நகராட்சிப்பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாத வண்ணம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரனோ வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள் 10X8 ( **Flex board**) 20 nos மற்றும் **கோவிட்–19 கொரனோ** வெளிநாடு மற்றும் வெளிமாநிலத்திலிருந்து வந்தவர்களை வீட்டில் தனிமைப்படுத்துதல் தொடர்பான A4 அளவு கொண்ட கலர் துண்டு பிரசுரங்கள் **(Colour Sticker) 1000** எண்ணம் அச்சடித்து விநியோகம் செய்யும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி ரூ.97,500/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்க்கொள்ள தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் 13.04.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. M. ராஜேந்திர பிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | **ரூ.95,200/–** |
| சூ 2 | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | **ரூ.96,880/–** |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.M. ராஜேந்திர பிரசாத், ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு கொரனோ தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள் **(Flex board)** மற்றும் **கோவிட்–19** கொரனோ தனிமைப்படுத்துதல் தொடர்பான துண்டு பிரசுரங்கள் **(Colour Sticker)** அச்சடித்து பெறப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1499/2020/இ1)**

**தீர்மான எண். 92**

பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்– 22**

கடையநல்லூர் நகராட்சி – பொதுசுகாதார பிரிவிலுள்ள வாகனங்களுக்கு ஓட்டுநர்கள் ஒப்பந்தஅடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் 995000/– மதிப்பீட்டில் பணியிலமர்த்தும் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி நாள்–15.04.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 24.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APMA காஜா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | மதிப்பீட்டு<br>சதவீதம் | ரூ.9950/– செல்லாண்<br>எண்.141/001/2/20–<br>21/0000234நாள்.24.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |
| திரு. P.ஆயிசா<br>ஒப்பந்தக்காரர்,<br>பேட்டை,திருநெல்வேலி. | 19.52%<br>அதிகம் | ரூ.9950/– செல்லாண்<br>எண்.141/001/2/20–21/0000235<br>நாள்.24.04.2020ன் படி<br>செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டு சதவீதத்தில் திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்காரரிடம் விலைக்குறைப்பு **(Negotation)** கடிதம் 27.04.2020 அன்று கோரப்பட்டதில்

மேற்காணும் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டு சதவீதத்திலிருந்து குறைத்து 0.40% சதவீதத்தில் பணிகள் மேற்க்கொள்ள சம்மதக்கடிதம் வழங்கியுள்ளார். எனவே திரு. APMA காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1555/2020/இ1)**

**தீர்மான எண். 93**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 23</u>**

கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 20KVA ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதை 75000/– மதிப்பீட்டில் பழுதுநீக்கம் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.326 நாள்.19.12.2019ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 24.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. K.S அப்துல் மாலிக், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.30% குறைவு | ரூ.800/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000232 நாள்.24.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.M.அசன் முஹம்மது ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.88% அதிகம் | ரூ.800/– செல்லாண் எண்.141/001/2/20–21/0000233 நாள்.24.04.2020ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.30% சதவீதம் குறைவாக திரு. K.S அப்துல் மாலிக், ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1555/2020/இ1)**

**தீர்மான எண். 94**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 24</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–20ன் கீழ் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முகம்மது அபூபக்கர் அவர்கள் இந்நகராட்சிக்கு பரிந்துரை செய்த **கடையநல்லூர் நகராட்சி அட்டைகுளம் மேல்புறம் அருந்ததியர் சமுதாயத்திற்கு எரிமேடை போர்வெல் சிறுமின்விசை மோட்டார்/தொட்டி அமைத்தல் பணிக்கு** மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/5044/2019 நாள்.27.03.2020 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பணியின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 32712019/இ1)**

**தீர்மான எண். 95**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்– 25</u>**

கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் மொத்தம் தெருவிளக்குகளின் எண்ணிக்கை 2664 ஆகும். மேற்காணும் தெருவிளக்குகளை பராமரிக்க போதுமான மின் பணியாளர்கள் இல்லாததால் பணியாளர் செலவீனம் மற்றும் மின்சாதன கொள்முதல் செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிப்பெற்று கடந்த 2005ம் ஆண்டு முதல் தொடர்ந்து தெரு விளக்குகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. அதனடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களது கடித எண்.13899/2016/Do1 நாள்.02.03.2017ன்படி இந்நகராட்சி

அனைத்து பகுதிகளிலுள்ள தெருவிளக்குகளை கடந்த 01.05.2017முதல் 31.04.2020 முடிய மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ளும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.04.2020 உடன் முடிவடைவதால் இப்பணியினை 2020ம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ஒரு ஆண்டிற்கு பொதுப்பணித்துறை தரவிலைபட்டியல் 2019–2020ன் அடிப்படையில் ரூ.34.00 இலட்சத்திற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு நாகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற வேண்டி இந்நகர்மன்ற தீர்மான எண்.65 நாள்.07.04.2020ன்படி அனுமதி பெறப்பட்டது. தற்போது நாடு முழுவதும் கொரோனோ வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்க 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஊரடங்கு அமுலில் உள்ளதால் மேல் நடிவடிக்கை ஏதும் தொடர முடியாத நிலையில் இருந்து வருகிறது. இந்நிலையில் தற்போது 2020–2021ம் ஆண்டிற்கு பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதால் அதனடிப்படையில் திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதில் ஒரு ஆண்டிற்கு திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூ.43.10 இலட்சத்திற்கு நாகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள கருத்துருக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) இந்நகராட்சிப்பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் வாயிலாக மேற்கொள்ள 2020–2021ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியலின் படி திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளதால் இந்நகர்மன்ற தீர்மான எண்.65 நாள்.07.04.2020ன்படி இயற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யவும் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

ஆ) மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் வாயிலாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதிப் பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு பணியினை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள கருத்துரு மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1240/2020 /இ1)**

**தீர்மான எண். 96**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 26</u>**

இந்நகராட்சியின் அனைத்து பிரிவிகளிலுள்ள கணினி இண்டர்நெட் இணைப்புகளை இவ்வலுவலக மேல் மற்றும் கீழ் தளங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து 4U Rackல் உள்ள RJ45 Connector மற்றும் இண்டர் நெட் வயர்களை அனைத்து பிரிவுகளிலும் மூடப்படாமல் இருக்கும் ஜன்னல் மற்றும் திறந்த வெளி வழியாக அணில், எலி மற்றும் இதர உயிரினங்கள் கடித்து சேதப்படுத்தியுள்ளது. எனவே அனைத்து பிரிவுகளுக்கான இண்டர் நெட் இணைப்பு துண்டிக்கப்பட்டு அனைத்து அலுவலகப் பணிகளும் தேக்கமடையும் சூழ்நிலை நிலவுவதால் நிர்வாக நலன் கருதி அனைத்து அலவலகப் பணிகளும் தேக்கமின்றி சீராக நடைபெற சேதசமடைந்த அனைத்து பிரிவுகளின் இண்டர்நெட் இணைப்புக்கான RJ45 Connector 30 எண்ணங்கள் மற்றும் நெட் கேபிள் வாங்கி பொருத்தி சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.12750/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1245/2020/இ1)**

**தீர்மான எண். 97**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 27**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் கடிதம் ந.க.எண்.29045/2019/D02 நாள்.05.02.2020ன்படி 01.06.2019 முதல் 30.04.2020 வரை தனியார் நிறுவனமான M/S.ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு செயல்முறை ஆணை உத்திரவு வழங்கப்பட்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கான ஒப்பந்தக்காலம் மூன்று ஆண்டுகள் (01.05.2017 முதல் 30.04.2020 வரை) முடிவுறும் நிலையில் இந்நகர்மன்ற தீர்மான எண்.65 நாள்.07.04.2020ம் தேதிய தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதன் கருத்துருவினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற வேண்டி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் நிலையில் தற்போது நாடு முழுவதும் கொரோனோ வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்க 144 தடை உத்திரவு ஊரடங்கு அமுலில் உள்ளதால் மேல் நடவடிக்கை தொடர காலதாமதம் எற்ப்படுகின்றது. இந்நிலையில் 01.05.2020 முதல் தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ள வேண்டியிருப்பதால் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற் கொண்டும் ஏற்கனவே 01.06.2019 முதல் 30.04.2020 வரை மேற்கொண்டு வந்த தனியார் நிறுவனமான M/S.ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு வேலை உத்திரவு வழங்கும் வரை 01.06.2019 முதல் 30.04.2020 வரை மேற்கொண்ட விலை விகிதத்தில் தொடர்ந்து இந்நகராட்சிப் பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்வது குறித்து 13.04.2020 அன்று சம்மத கடிதம் வழங்க கேட்டு கோரப்பட்டதில் 16.04.2020ம் தேதிய கடிதத்தில் பழையவிலை விகிதத்திலேயே தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள சம்மத கடிதம் வழங்கியுள்ளனர். ஆகவே M/S.ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மூலம் 01.05.2020 முதல் ஒப்பந்துபுள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு வேலை உத்திரவு வழங்கும் வரை 01.06.2019 முதல் 30.04.2020 வரை மேற்கொண்ட விலைவிகிதத்தில் மேற்க்கொள்ளவும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்கவும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5130/2016/இ1)**

**தீர்மான எண். 98**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 28**

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிக்கடையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1881/2017/MCA4 நாள்.24.03.2020ன்படி அம்மா உணவகத்தில் உணவு தயாரித்து வழங்குவதற்க ரூ.2.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த நோய்த்தடுப்பு பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்கள், சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆதரவற்றோர்கள் ஆகியோர்களுக்கு 27.03.2020 முதல் அம்மா உணவகம் மூலம் இலவசமாக மூன்று வேளை உணவு தயார் செய்யப்பட்டு வழங்கி வரப்படுவதற்கும், மேலும் அதற்காகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1881/2017/MCA4 நாள்.24.03.2020ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2,00,000/–ல் இருந்து செலவிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 99**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 29</u>**

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும் பணிகளில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆகியோருக்கு கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு கசாயம் ஆகியவைகளை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் பொருட்டு வழங்கிட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் ந.க.எண்.5437/ஜே2/2020–20, நாள்.30.04.20ல் உத்திரவிட்டுள்ளதின்படி பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் நலனை கருதி அவசியமாக கபசுர குடிநீர் பொடி மற்றும் நிலவேம்பு பொடி தற்போது தேவைப்படுகிறது.

மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் கபசுரக்குடிநீர் பவுடர் 200 கிலோ, நிலவேம்பு கசாயபொடி 500 கிலோ அரசு நிறுவனமான டாம்ப்கால், ஆலந்தூர் மூலம் வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதன் பொருட்டு அவசர அவசியத் தேவையை முன்னிட்டு மேற்படி டாம்ப்கால் அரசு நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கியுதையும் இதன் பொருட்டு செலவுத்தொகை ரூ.4,03,850/–ற்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி மூவாயிரத்தி எண்ணூற்றி ஐம்பது மட்டும்) மேற்படி செலவினத்தை கொரோனா நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1452/2020/எச்1)**

**தீர்மான எண். 100**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 30</u>**

இந்நகராட்சி பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரை ஆய்வு செய்ய குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்ய ஏப்ரல் –2020 முதல் மார்ச் 2021 வரை 4 மாதிரிகளுக்கு மாதிரி ஒன்றுக்கு 1,200/–வீதம் பன்னிரெண்டு மாதத்திற்கு ரூ.57,600/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.452/2010/இ2)**

**தீர்மான எண். 101**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 31</u>**

கடையநல்லூர் நகராட்சி – உள்ளாட்சி தேர்தல் 2020க்கு இந்நகராட்சி சார்பாக கண்டறியப்பட்டுள்ள வாக்குசாவடிகள் 74 எண்ணத்திற்கு வாக்குசாவடி எண் பெயிண்டிங் (எழுத்து) எழுதி புகைப்படம் எடுக்க வேண்டிய பணிக்கு ரூ.15000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தகுதி பெற்ற ஒப்பந்தகாரர்களிடம் 13.04.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | வாக்குசாவடி எண் ஒன்றிற்கு ரூ.95/–<br>புகைப்படம் ஒன்றிற்கு ரூ.10/– |
| 2 | திரு. M. ராஜேந்திர பிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | வாக்குசாவடி எண் ஒன்றிற்கு ரூ.100/–<br>புகைப்படம் ஒன்றிற்கு ரூ.15/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.K.S. அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு வாக்குசாவடி எண் பெயிண்டிங் (எழுத்து) எழுதி புகைப்படம் எடுக்க வேண்டிய பணிகளை மேற்க்கொள்ளுவதற்கு தனிஅலுவலர் அவர்கள் 13.04.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1534/2020/இ1)**

**தீர்மான எண். 102**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 32**

கடையநல்லூர் நகராட்சி – **கோவிட்–19 தொற்று நோய்** இந்நகராட்சிப்பகுதியில் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சிக்கு சொந்தமான 3000லிட்டர் குடிதண்ணீர் லாரியில் புதிதாக 5.50 HP டீசல் மோட்டார் பொருத்தி கொரனா தடுப்பு கரைசல் கலந்து நகராட்சிப்பகுதியில் பாதிக்கப்பட்ட மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் தெளிக்கும் பணிக்கு ரூ.39000/– உத்தேச மதிப்பீட்டில் புதிதாக 5.50 HP டீசல் மோட்டார் வாங்கி விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் அவசர அவசியம் கருதி தகுதி பெற்ற ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிறுவனங்களிடம் 30.03.2020 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.38640/– |
| 2 | திரு. G. முருகன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.39500/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.K.S. அப்துல்மாலிக் ஒப்பந்தக்காரர் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு புதிதாக 5.50 HP டீசல் மோட்டார் வாங்கி விநியோகம் செய்யும் பணிகளை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1535/2020/இ1)**

**தீர்மான எண். 103**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்– 33**

கடையநல்லூர் நகராட்சி பெரியாற்றுப்படுகையில் புதிதாக திறந்த வெளிக்கிணறு அமைக்கும் பணிக்கு மின் விநியோகம் வேண்டி உதவி மின் பொறியாளர் விநியோம் கிராமபுறம் கடையநல்லூர் அவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அதன்படி உதவி மின் பொறியாளர் விநியோகம்/கிராமபுறம் கடையநல்லூர் அவர்களின் கடித எண்.உ.மி.பொ/வி//கிராம/ கடையநல்லூர் நகராட்சி அ.எண்.172/19–20 நாள் 06.07.2019ன்படி மின் இணைப்பு வழங்க மதிப்பீட்டு கட்டணம் ரூ.17700/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்காணும் மதிப்பீட்டு கட்டணத்தை பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசிய கருதி மின் இணைப்பு மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.17700/–யை திரு.M.மாடசாமி ஒப்பந்தகாரர் மூலம் மின்சார வாரியம் கடையநல்லூர் செலுத்தப்பட்டதற்கு அத்தொகை ரூ.17700/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1219/2018 /இ1)**

**தீர்மான எண். 104**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)G.தங்கபாண்டி**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ),**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்(பொ),**
**கடையநல்லூர் நகராட்சி.**